**செய்தி வெளியீடு: 432** **நாள்: 27.5.2010**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன்அவர்கள் இன்று (27.5.2010) சென்னையில் தொழிலாளர் துறைக்கான மின் ஆளுமை முறையில் LEAD திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள புதிய வலைதளம், " **தொழிலாளர் நல்லுறவு மலர்** " மற்றும் சீரமைக்கப்பட்ட பார்வையாளர் அறை ஆகியவற்றினை தொடங்கி வைத்தார்கள்.

இன்று (27.5.2010) சென்னை, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ். வளாகத்தில் உள்ள தொழிலாளர் நல ஆணையரகத்தில், தொழிலாளர் துறை மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகளை E- Governance என்ற மின் ஆளுமை முறையில் LEAD திட்டத்தின் கீழ் செயல்படும் வகையில் புதிய வலைதளத்தினை (http://www.labour.tn.gov.in/) தொடங்கி வைத்தார்கள். இந்த வலைதளத்தின் மூலம் தொழிலாளர் துறை மற்றும் பல்வேறு அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் குறித்த விவரங்களை பொதுமக்கள் அனைவரும் எளிமையாக அறிந்துகொள்ளலாம்.

மேலும், தொழிலாளர் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுடைய உள்சுற்றுக்கென, காலாண்டிற்கு ஒருமுறை , தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இலவசமாக வெளிவரும் " **தொழிலாளர் நல்லுறவு மலர்** " என்ற செய்தி மலரையும் வெளியிட்டார்கள். தொழிலாளர் நல்லுறவு மலரின் மூலமாக, தொழிலாளர் துறை அலுவலர் மேலாண்மை, தொழிலாளர் துறையின் மூலமாக வெளியிடப்படும் சிறப்பு அரசாணைகள், சிறப்பு கட்டுரைகள், தேவைப்படும் புள்ளி விவரங்கள், ஆகியவை தெரிவிக்கப்படும்.

பின்னர், தொழிலாளர் நல ஆணையரகத்தில் சீரமைக்கப்பட்ட **பார்வையாளர்களுக்கான புதிய அறை**யினையும் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் டி.பிரபாகரராவ், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் மற்றும் தொழிலாளர் ஆணையர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., கூடுதல் தொழிலாளர் ஆணையர் திரு. பி. கருப்பசாமி, இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

**********

**வெளியீடு:**

**இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்புத்துறை,**
**தலைமைச் செயலகம்,**
**சென்னை–9.**